ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2413/38 - 2024 දෙසැම්බර් මස 04 වැනි බදාදා - 2024.12.04

*2413/38 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 04 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கை தேசிய கணக்காய்வு அலுவலகத்தால் ஏற்கப்பட்ட செயலாற்றல் கணக்காய்வுக்கு ஏற்ற வகையிலான இலங்கை செயலாற்றல் கணக்காய்வு நியமங்கள்** (PASs-NAOSL)

*2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம்*

**பிரிவு 5(2)இன் கீழான வெளியீடு**

இலங்கை, கணக்காய்வு சேவை ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில் (இனி “ஆணைக்குழு” எனக் குறிப்பிடப்படும்), இலங்கை, தேசிய கணக்காய்வு அலுவலகத்தால் நடத்தப்படும் செயலாற்றல் கணக்காய்விற்கு (PASs-NAOSL) ஏற்ற வகையிலான செயலாற்றல் கணக்காய்வு நியமங்களை ஆணைக்குழு இங்கு வெளியிடப்பட்டவாறு ஏற்றுக்கொண்டுள்ளது. இந்நியமங்கள் 2024 திசெம்பர் 11 அன்று நடைமுறைக்கு வரும்.

செயலாளர்,<br>
கணக்காய்வு சேவை ஆணைக்குழு.

*2024, திசெம்பர் 22.*

இலங்கை தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்கான செயலாற்றல் கணக்காய்வு நியமம்<br>
*(உயர் கணக்காய்வு நிறுவனங்களுக்கான சர்வதேச நியமம் - ஐஎஸ்எஸ்ஏஐ - 3000 ஐச் சார்ந்ததாகும்)*

**முன்னுரை**

சர்வதேச கணக்காய்வு நியமம், தேசியமயமாக்கும் தேவைப்பாட்டை இனங்கண்ட தேசிய கணக்காய்வு ஆணைக்குழு, 2023 மே 24 ஆந் திகதி இடம்பெற்ற ஆணைக்குழுக் கூட்டத்தில், உயர் கணக்காய்வு நிறுவனங்களுக்கான சர்வதேச அமைப்பு (INTOSAI) இனால் வெளியிடப்பட்ட உயர் கணக்காய்வு நிறுவனங்களுக்கான செயற்திறன் கணக்காய்வு தொடர்பான சர்வதேச நியமங்கள் (International Standards of Supreme Audit Institutions (ISSAI) for Performance Auditing) தேசிய தேவைப்பாட்டிற்கு உகந்த வகையில் தயாரிக்கப்படுவதற்காக குழு ஒன்றை நியமிப்பதற்கு தீர்மானித்தது. இதற்கமைவாக, இலங்கை தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்கான செயலாற்றல் கணக்காய்வு நியமம் தயாரிக்கப்பட்டுள்ளது.

1A - PG 6933 — 24 (2024/12)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

உயர் கணக்காய்வு நிறுவனங்களுக்கான சர்வதேச அமைப்பின் தொழிற்திறன் அறிவிப்பு கட்டமைப்பின் (INTOSAI Framework of Professional Pronouncement – IFPP) ஓர் பகுதியாக அவ் அமைப்பால் உயர் கணக்காய்வு நிறுவனங்களுக்கான செயலாற்றல் கணக்காய்வு தொடர்பான சர்வதேச நியமம் - 300 (ISSAI – 300) மற்றும் உயர் கணக்காய்வு நிறுவனங்களுக்கான செயலாற்றல் கணக்காய்வு தொடர்பான சர்வதேச நியமம் 3000 (ISSAI – 3000) நடைமுறைப்படுத்துவதற்கான கைநூலும் இரண்டு வழிகாட்டிகளும் (GUID 3910 and GUID 3920) விநியோகிக்கப்பட்டுள்ளன. மேற்குறித்த சர்வதேச நியமங்களுக்கு இணங்கும் வகையில், இச்செயலாற்றல் கணக்காய்வு நியமம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்நியமம், இத்துடன் வெளியிடப்பட்டுள்ள இலங்கை செயலாற்றல் கணக்காய்வு நியமம் நடைமுறைப்படுத்துவதற்கான கைநூலுடன் இணைத்து வாசிக்கப்பட வேண்டும். நியமங்களின் நடைமுறைக்கேற்ற வகையிலான அம்சங்களுக்கான விளக்கக் குறிப்புகள் அக்கைநூலில் உள்ளடக்கப்படும்.

இந்நியமங்கள், இலங்கை தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் சொத்தாவதுடன் வெளித் தரப்பினரால் இதனை பிரசுரிப்பதோ அல்லது பயன்படுத்தப்படுவதோ தடை செய்யப்பட்டுள்ளது.

இலங்கை தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்கான செயலாற்றல் கணக்காய்வு நியமம்

(உயர் கணக்காய்வு நிறுவனங்களுக்கான சர்வதேச நியமம் - ஐஎஸ்எஸ்ஏஐ - 3000 ஐச் சார்ந்ததாகும்)

**அறிமுகம்**

01. **பொது விடயங்கள்**

(அ) அரச கணக்காய்வின் பொறுப்பான தன்மை, தரம் மற்றும் தொழிற்திறன் குறித்து உறுதிப்படுத்துவதற்காக தொழிற்திறன் நியமமும் வழிகாட்டலும் அத்தியாவசியமானவையாகும். தேசிய கணக்காய்வு அலுவலகத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் செயலாற்றல் கணக்காய்வின் தரத்தை மேம்படுத்தும் நோக்கில் இலங்கை தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்கான இச்செயலாற்றல் கணக்காய்வு நியமம், இலங்கை தேசிய கணக்காய்வு ஆணைக்குழுவால் வெளியிடப்பட்டுள்ளது.

(ஆ) இந்நியமம், இலங்கை தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் பயன்பாட்டிற்கான செயலாற்றல் கணக்காய்வு நியமமாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

(இ) இச்செயலாற்றல் கணக்காய்வு நியமம், உயர் கணக்காய்வு நிறுவனங்களுக்கான செயலாற்றல் கணக்காய்வு தொடர்பான சர்வதேச நியமங்களுக்கு (ISSAI) இணையாகத் தயாரிக்கப்பட்டுள்ளது. உயர் கணக்காய்வு நிறுவனங்களுக்கான செயலாற்றல் கணக்காய்வு தொடர்பான சர்வதேச நியமம் - 300 (ISSAI – 300) மற்றும் உயர் கணக்காய்வு நிறுவனங்களுக்கான செயலாற்றல் கணக்காய்வு தொடர்பான சர்வதேச நியமம் -3000 (ISSAI – 3000) இற்கு இணங்கும் வகையில் இந்நியமம் முக்கிய நான்கு பிரிவுகளாக கட்டமைக்கப்பட்டுள்ளது.

(i) செயலாற்றல் கணக்காய்வு நியமத்தின் நோக்கெல்லை

(ii) செயலாற்றல் கணக்காய்வின் வரைவிலக்கணமும் நோக்கமும்

(iii) செயலாற்றல் கணக்காய்விற்கான பொதுத் தேவைப்பாடு. இதற்கான சுதந்திரத்தன்மை மற்றும் நெறிமுறைகள், எதிர்பார்க்கப்படும் பயன்பாட்டாளர்கள் மற்றும் பொறுப்புவாய்ந்த தரப்பினர்களை தொடர்புகொண்டு விடயக் குறிப்புகள், உறுதிப்படுத்தல்கள், கணக்காய்வு அணுகுமுறை, கணக்காய்வு நிர்ணயங்கள், கணக்காய்வு இடர்கள், திறன்கள், தொடர்பாடல், கண்காணிப்பு, தொழிற்திறன் தீர்ப்பு மற்றும் ஐயப்பாடு, தரக் கட்டுப்பாடு, பொருண்மை மற்றும் அறிக்கையிடல் போன்ற விடயங்கள் தொடர்பான அறிமுகம் உள்ளடக்கப்படும்.

(iv) கணக்காய்வுச் செயற்பாட்டின் முக்கிய படிமுறைகள். கணக்காய்வுத் திட்டமிடல், செயற்படுத்தல், அறிக்கையிடல் மற்றும் பின்தொடர் ஆய்வு போன்ற படிமுறைகள் இதில் உள்ளடங்கும்.

02. **அதிகாரம்**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 5(2) ஆம் பிரிவின்படி, கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழுவிற்கு இந்நியமத்தை வெளியிடுவதற்கான அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

**1 ஆம் பிரிவு**

**இலங்கையில் செயலாற்றல் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் விடய நோக்கெல்லை.**

03 (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம், அரசாங்கம் அல்லது அரசாங்க நிறுவனம் ஒன்றிடம் உள்ள 50 சதவீத அல்லது அதற்கு மேற்பட்ட பங்குகளின் உரித்தைக் கொண்ட கம்பனிகளும் உள்ளடங்கலாக சகல அரச நிறுவனங்களும் அவற்றின் கணக்குகள் உட்பட கணக்காய்வு செய்யப்படுவதற்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுமதி உள்ளதுடன் அவ் அரசாங்க நிறுவனங்கள் தொடர்பாக எந்தவகையிலுமான கணக்காய்வொன்றை மேற்கொள்வதற்கான சுதந்திரம் உள்ளது.

(ஆ) 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 3 (2) ஆம் பிரிவின் மூலம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் விடய நோக்கெல்லை நிர்ணயிக்கப்பட்டுள்ளதுடன் அரசாங்க நிறுவனங்களிடம் உள்ள நிதி மற்றும் ஆதனங்கள் தொடர்பாக வெளிப்படையான முகாமைத்துவம் தொடர்பான கணக்காய்வும் இதனுள் அடங்கும்.

(இ) உயர் கணக்காய்வு நிறுவனத்திற்கான செயலாற்றல் கணக்காய்வு தொடர்பான சர்வதேச நியமம் - 300 இன் மூலம் செயலாற்றல் கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க அல்லது அவற்றை அடிப்படையாகக் கொண்டு அதிகாரபூர்வமான செயலாற்றல் கணக்காய்வு நியமத் தொகுப்பை அமைத்துக்கொள்வதற்காக உயர் கணக்காய்வு நிறுவனங்களுக்கு அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது.

04. செயலாற்றல் கணக்காய்வு எண்ணக்கருக்களிற்காக மிகவும் விரிவான வகையில் விடயக் காரணிகள் மற்றும் ஆராய்ச்சி முறைகளைப் பயன்படுத்திக்கொள்ள முடியும். இதன்படி, ஒன்றுடன் ஒன்று மாறுபட்ட வகையிலான கணக்காய்வு அணுகுமுறைகளை இயலுமானவு நெகிழ்வான முறையில் பயன்படுத்துவதற்கான சாத்தியம் கிடைக்கப்பெறுவதுடன் குறித்த விடயக் காரணி தொடர்பாக உரித்துடைய வழிநடத்தல்களை முழுமையான வகையில் பயன்படுத்துவதற்கும் அனுமதிக்கின்றது. சிக்கல் ஏற்படாதவிடத்து, இந்நியமங்கள், உயர் கணக்காய்வு நிறுவனங்களுக்கான செயலாற்றல் கணக்காய்வு தொடர்பான சர்வதேச நியமம் அல்லது வேறு மூலாதாரங்களின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட நியமங்களை அடிப்படையாகக் கொண்டு கணக்காய்வை மேற்கொள்ள முடியும். அத்தகைய சந்தர்ப்பங்களின் போது, அந்நியமங்களுக்கு அல்லது உயர் கணக்காய்வு நிறுவனங்களுக்கான செயலாற்றல் கணக்காய்வு தொடர்பான சர்வதேச நியமம் தொடர்பாக குறித்த தொடர்பைக் குறிப்பிடல் வேண்டும்.

05. நிதி அல்லது இணக்க கணக்காய்வை உள்ளடக்கும் வகையில் மேற்கொள்ளப்படும் மிகப் பரந்த கணக்காய்வின் ஓர் பிரிவாக செயலாற்றல் கணக்காய்வின் கூறுகள் உள்ளடக்கப்படலாம். கணக்காய்வின் வகை ஒன்றுடன் ஒன்று சேர்கையில் அல்லது மீப்படுகையில் எந்த கணக்காய்வு நியமங்களைப் பின்பற்றப்பட வேண்டும் எனத் தீர்மானிப்பதற்காக கணக்காய்வாளர், குறித்த சகல கணக்காய்வு நியமங்களையும் அவதானிப்பிற்கு உட்படுத்த வேண்டியதுடன் குறித்த கணக்காய்வின் போது சார்ந்திருக்க வேண்டிய மூல நோக்கங்கள் மற்றும் வேறு முன்னுரிமைகள் நிலவுகின்றனவா என்பது குறித்தும் கருத்திற்கொள்ள வேண்டும்.

**2 ஆம் பிரிவு**

**செயலாற்றல் கணக்காய்வு தொடர்பான வரைவிலக்கணமும் அதன் நோக்கமும்**

06. **வரைவிலக்கணம்**

அரசாங்க முயற்சிகள், முறைமைகள், செயற்பணிகள், நிகழ்ச்சித்திட்டங்கள், செயற்பாடுகள் அல்லது அமைப்புகள் முதலியவற்றின் செயற்பாடுகள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் அல்லது பயனுறுதி வாய்ந்த கொள்கைகளிற்கு இணங்க நடைமுறைப்படுத்தப்படுவதாகவும் குறித்த செயற்பாடுகள் மேலும் விருத்தி செய்வதற்கான இடமுள்ளதாக உறுதிப்படுத்தப்படுவதற்காக மேற்கொள்ளப்படும் சுயாதீன, நோக்கமுடனான நம்பிக்கையான ஆய்வே செயலாற்றல் கணக்காய்வாகும்.

**சிக்கனத் தன்மை**

சொத்துக்களின் கிரயத்தை குறைத்தலே, சிக்கனத் தன்மையின் கோட்பாட்டின் மூலம் கருதப்படுகின்றது. பயன்படுத்தப்பட்ட வளங்கள், சிறந்த விலைக்கு முறையான தரத்திலும் அளவிலும் உரிய காலப்பகுதியில் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

**செயற்திறன்**

பெற்றுக்கொள்ளக்கூடிய வளங்களில் இருந்து உச்ச அளவிலான பூர்த்தியைப் பெற்றுக்கொள்வது செயற்திறனின் கோட்பாட்டின் மூலம் கருதப்படுகின்றது. அளவு, தரம் மற்றும் குறித்த காலத்தில் பெற்றுக்கொள்ளுதல் போன்ற விடயங்களுக்கு உட்பட்டு பயன்படுத்தப்படும் வளங்கள் மற்றும் அவற்றின் பூர்த்தியாக்கலுக்கு இடையே நிலவும் தொடர்பு இங்கு கருத்திற்கொள்ளப்படும்.

**பயனுறுதி**

இலக்கிடப்பட்ட நோக்கங்கள் மற்றும் எதிர்பார்க்கப்படும் விளைவுகள் அடையப்பெறுவதே பயனுறுதி தொடர்பான கோட்பாட்டின் மூலம் கருதப்படுகின்றது. பூர்த்தியடைதல், விளைவு மற்றும் பின்விளைவுகளின் அளவு போன்றவற்றுடன் இது தொடர்புற்றதாகும்.

செயலாற்றல் கணக்காய்விற்காக தொடர்புறும் கணக்காய்வாளரால் சிக்கனத்தன்மை, செயற்திறன் மற்றும் பயனுறுதி தொடர்பான கோட்பாடுகளை உறுதிப்படுத்துவதற்காக ஏதேனுமோர் தொழில்முயற்சியால் அதன் நிறுவக மற்றும் ஒழுங்குமுறை ஏற்பாடுகளின் மூலம் தேவைப்பாட்டுடன் நிறுவப்பட்ட நிலைகள் பகுப்பாய்வு செய்யப்பட வேண்டும். மேலும், சிக்கனத்தன்மை, செயற்திறன் மற்றும் பயனுதி தொடர்பான கோட்பாடுகளுக்கு இணங்க குறித்த சேவைகள் சரியாகவும் நாளதுவரையாகவும் வழங்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்காக போதிய முகாமைத்துவ நடைமுறைகளையும் செயற்பாடுகளையும் பின்பற்றுவதற்கான கணக்காய்விற்கு உட்படுத்தப்படும் தொழில் முயற்சியிடம் உள்ள திட்டங்கள் தொடர்பாக கணக்காய்வாளர் முதலில் திருப்திகொள்ள வேண்டும்.

07. **நோக்கம்**

செயலாற்றல் கணக்காய்வின் நோக்கமாக அரசாங்க பிரிவில், நல்லாட்சி, கணக்கீட்டு நடவடிக்கைகளின் தன்மை மற்றும் வெளிப்படைத்தன்மை என்பவற்றை உறுதிப்படுத்துவதற்காக தேவையான சிக்கனத் தன்மை, செயற்திறன் மற்றும் பயனுறுதி போன்ற கோட்பாடுகளை மேம்படுத்துவதற்காக பங்களிப்புச் செய்வதாகும். மேலும், மேலதிக தகவல்கள், பகுப்பாய்வுகள் மற்றும் சூட்சுமமான தொலைநோக்கு போன்றவற்றை வழங்கி தேவையான வகையில் மேம்படுத்தி விருத்திகளுக்கான பரிந்துரைகளை சமர்ப்பித்தலும் செயலாற்றல் கணக்காய்வின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

### 3 ஆம் பிரிவு

### செயலாற்றல் கணக்காய்வு தொடர்பான பொதுவான தேவைப்பாடுகள்

08. **சுயாதீனமும் நெறிமுறைகளும்**

இலங்கை தேசிய கணக்காய்வு அலுவலகத்தால் பின்பற்றப்படும் சுயாதீனம் மற்றும் நெறிமுறைகள் தொடர்பான நடைமுறைகள், கணக்காய்வாளரால் பின்பற்றப்பட வேண்டும்.

சுயாதீனம் தொடர்பான கோட்பாடு இரு பிரிவுகளைக் கொண்டமைந்ததாகும்.

(அ) காரணி சுயாதீனம்
(ஆ) தோற்றப்பாட்டு சுயாதீனம்

**காரணி சுயாதீனம்**, கணக்காய்வாளருக்கு தனது பணியை, தொழில் ரீதியான தீர்மானத்திற்கு உரித்துடைய தரத்திற்கு இடையூறின்றி நேர்மையாகவும், பக்கச்சார்பற்ற முறையிலும் தொழிற்துறை நிபுணத்துவ சந்தேச நோக்கிலும் செயற்படுவதற்கான வாய்ப்பளித்தல்.

**தோற்றப்பாட்டு சுயாதீனம்**, கணக்காய்வாளரின் நேர்மை, பக்கச்சார்பின்மை மற்றும் தொழிற்துறை நிபுணத்துவ சந்தேச நோக்குப் பார்வை தொடர்பாக சாதாரண சந்தேக நிலை நிலவும் எவரேனும் தரப்பினரால் கணக்காய்வாளர் தொழிற்துறை தீர்ப்புகளுக்கு உரித்தான தரங்களுக்கு இணங்கும் வகையில் செயற்படுவதை தீர்மானிப்பதாகும்.

09. **எதிர்பார்க்கப்பட்ட பயனாளர்கள் மற்றும் பொறுப்பான தரப்பினர்**

கணக்காய்வு தொடர்பாக எதிர்பார்க்கப்பட்ட பயனாளர்களையும் பொறுப்பான தரப்பினர்களையும் இனங்காண்பதற்கு செயலாற்றல் கணக்காய்வாளர் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். கணக்காய்வை மேற்கொள்ளும் காலப்பகுதி முழுவதிலும் இந்நபர்களின் தாக்கத்தை இனங்கண்டு இதன் படி, கணக்காய்வை நடைமுறைப்படுத்துவதற்கு கணக்காய்வாளர் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

**எதிர்பார்க்கப்பட்ட பயனாளர்களாக** கணக்காய்வாளர் தனது செயலாற்றல் கணக்காய்வு அறிக்கையைத் தயாரித்து வழங்குவதற்கு இலக்கிடப்பட்ட தரப்பினராவர். பாராளுமன்றம், அரசாங்க நிறுவனங்கள் மற்றும் கணக்காய்வு அறிக்கைகளை கருத்திற்கொள்வதற்கான மூன்றாம் தரப்பினர் மற்றும் குடிமகன்கள் ஆகிய சகல தரப்பினரும் எதிர்பார்க்கப்பட்ட பயனாளர்களாக இனங்காணப்பட முடியும்.

பொறுப்பு வாய்ந்த தரப்பினர்களாக கணக்காய்விற்கு உட்படுத்தப்படும் தலைப்புத் தொடர்பாக பல்வேறு விதத்தில் பொறுப்பை ஏற்கும் நிறுவனங்கள் அல்லது தனிநபர்கள் குழுக்கள் கருதப்படுவர். கணக்காய்விற்கு உரித்தான விடயத்திற்கு செயற்பாடுகள் அல்லது கண்காணிப்புச் செயற்பணியை மேற்கொள்ளும் தரப்பினர்கள் மற்றும் கணக்காய்வு பரிந்துரைகளை கருத்திற்கொண்டு குறித்த மாற்றங்களுக்காக தொடர்புகொள்ளும் தரப்பினர்களும் பொறுப்புவாய்ந்த தரப்பினர்களில் உள்ளடங்குவர். பொறுப்புவாய்ந்த தரப்பினர், எதிர்பார்க்கும் பயன்பாட்டாளர்களாகவும் முடியும்.

**10. விடயப் பொருள்**

செயலாற்றல் கணக்காய்விற்காக செயலாற்றல் கணக்காய்வாளர், விடயப் பொருள் ஒன்றை இனங்கண்டுகொள்ள வேண்டும்.

**விடயப் பொருள்**, கணக்காய்வுத் தலைப்பை விபரிக்கும். இது "எதனைக் கணக்காய்வு செய்கின்றது" எனும் வினாவுடன் தொடர்புபடுவதுடன் கணக்காய்வின் நோக்கெல்லையில் இது குறித்து விளக்கப்படுகின்றது. விசேட நிகழ்ச்சித்திட்டங்கள், செயற்பாடுகள், முறைமைகள், முயற்சிகள் அல்லது நிதியம் மற்றும் செயற்பாடுகள் (அவற்றின் பூர்த்தி, விளைவு அல்லது தாக்கத்துடன்) அல்லது காரணங்கள் மற்றும் விளைவுகள் உள்ளடங்கலாக நிலவும் நிலைமைகள் போன்றன செயலாற்றல் கணக்காய்வு தொடர்பான விடயப்பொருளாகலாம்.

**கணக்காய்வின் நோக்கெல்லை**, கணக்காய்வுச் செயற்பாட்டுடன் மட்டுப்படுத்தப்படுவதுடன் இது கணக்காய்வின் நோக்கத்துடன் நேரடியாக பிணைக்கப்பட்டுள்ளது. கணக்காய்வின் நோக்கெல்லை, கணக்காய்வாளரால் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டு அறிக்கையிடப்படும் விடயப்பொருள், ஆய்விற்கு உட்படுத்தப்படும் ஆவணங்கள் மற்றும் அறிக்கைகள், பகுப்பாய்விற்கு உட்படுத்தப்படும் காலப்பகுதி மற்றும் உள்ளடக்கப்பட வேண்டிய பகுதிகள் போன்றவை வரைவிலக்கணப்படுத்தப்படும்.

**11. செயலாற்றல் கணக்காய்வின் நம்பிக்கையும் உறுதியும்**

கணக்காய்வின் விடயப்பொருளிற்கு உரித்தான அவதானிப்புகள் மற்றும் இதற்கு எதிராக கணக்காய்வில் இருந்து பெறப்பட்ட விளைவுகள் தொடர்பான உறுதிப்படுத்தல்களை கணக்காய்வாளர் வெளிப்படையான வகையில் வெளிப்படுத்தல் வேண்டும்.

**உறுதிப்படுத்தல்** என்பது, கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட கண்டுபிடிப்புகள், அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகள் தொடர்பாக உரிய அறிக்கையைப் பயன்படுத்தும் தரப்பினருக்கிடையே ஏற்படும் நம்பகத்தன்மை குறித்ததாகும். கணக்காய்வு காண்புகள், அவதானிப்புகள் மற்றும் முடிவுகள் போன்றவை சமநிலையாகவும் நியாயமாகவும் மேம்படுத்தப்பட்ட முறை மற்றும் கணக்காய்வு முடிவுகளிற்குக் காரணமான அவதானிப்புகள் குறித்த விடயங்களைத் தெளிவுபடுத்துவதன் மூலம் கணக்காய்வாளர் அறிக்கையைப் பயன்படுத்துபவர்களுக்கு உறுதிப்படுத்தல் ஒன்றை வழங்குகின்றார்.

செயலாற்றல் கணக்காய்வாளரால்

(அ) பொறுப்பு வாய்ந்த தரப்பினரின் செயற்பாடுகள் தொடர்பாக எதிபார்க்கும் பயன்பாட்டாளர்களிற்கு ஏற்புடையதும் நம்பகரமானதுமான தகவல்கள் வழங்கப்படுவதாகவும்

(ஆ) விடயப்பொருள் தொடர்பான காண்புகள், கணக்காய்வு நோக்கங்கள் மற்றும் முடிவுகளுடன் நிலவும் தர்க்கரீதியான தொடர்புகள் போதியளவிலும் பிரபல்யமான சான்றுகளின் மூலம் உறுதிப்படுத்தப்படுவதாகவும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

**12. கணக்காய்வு நோக்கங்கள்**

சிக்கனத் தன்மை, செயற்திறன் மற்றும் அல்லது/ஆக்கபூர்வம் தொடர்பான மூலதர்மங்கள் தொடர்பான வகையில் தெளிவாக விளக்கமளிக்கும் கணக்காய்வு நோக்கம், கணக்காய்வாளரால் தயாரிக்கப்பட வேண்டும்.

கணக்காய்வாளர் தனது கணக்காய்வு நோக்கம், தர்க்கரீதியான அடிப்படையுடன் முன்வைத்தல் வேண்டும். கணக்காய்வுப் பிரச்சினைகளுக்காக குறிப்பான பதில்களைப் பெற்றுக்கொள்வதற்காக போதிய விபரத்துடன் கணக்காய்வின் நோக்கங்களைத் தெளிவாக கணக்காய்வாளர் வெளிப்படுத்தல் வேண்டும்.

**13. கணக்காய்வு அணுகுமுறை**

செயலாற்றல் கணக்காய்வாளரால்

(அ) முடிவுகள் சார்ந்தவையாகவும்
(ஆ) பிரச்சினைகள் சார்ந்தவையாகவும்
(இ) முறைமைகள் சார்ந்தவையாகவும்
(ஈ) மேற்குறித்த சகலவற்றினதும் கலப்பாக தமது கணக்காய்வு அணுகுமுறையைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

**முடிவுகள் சார்ந்த கணக்காய்வு அணுகுமுறை** மூலம் எதிர்பார்க்கப்பட்டவாறு முடிவு அல்லது நிறைவு அடையப்படுகின்றதா என்பது குறித்தும் எதிர்பார்க்கப்பட்ட விதத்தில் செயற்பாடுகள் வழிநடத்தப்பட்டுள்ளதா என்பது குறித்தும் மதிப்பிடப்படுகின்றது.

**பிரச்சினைகள் சார்ந்த கணக்காய்வு அணுகுமுறை** மூலம் பிரச்சினைக்கு அல்லது பிரச்சினைக்கு அடிப்படையான காரணம் அல்லது கணக்காய்வு அளவுகோல்களில் இருந்து விலகுவதற்குக் காரணமான விடயங்களை ஆய்வு செய்தல், உறுதிப்படுத்தல் மற்றும் பகுப்பாய்வு செய்தல்.

முறைகள் சார்ந்த கணக்காய்வு அணுகுமுறை மூலம் முகாமைத்துவ முறைமையை முறையான செயற்பாட்டு ஆய்விற்கு உட்படுத்தப்படுதல்.

**14. கணக்காய்வு அளவுகோல்**

(அ) கணக்காய்வு அளவுகோல் என்பது விடயப்பொருளை அளவிடுவதற்காகப் பயன்படுத்தப்படும் அளவீட்டுக் காரணியாகும்.

(ஆ) செயலாற்றல் கணக்காய்வாளர் தகுந்த கணக்காய்வு அளவுகோலைத் தீர்மானித்தல் வேண்டும். அவை, கணக்காய்வு நோக்கம் மற்றும் கணக்காய்வுப் பிரச்சினைகளுக்கு உரித்தான வகையில் இருக்க வேண்டியதுடன் சிக்கனத்தன்மை, செயற்திறன் மற்றும்/அல்லது ஆக்கபூர்வம் எனும் மூலதர்மங்களுடன் தொடர்புபட்டிருத்தல் வேண்டும்.

(இ) கணக்காய்வுத் திட்டமிடப்படும் கட்டத்திலும் கணக்காய்வைச் செயற்படுத்தும் கட்டத்திலும் அக் கட்டங்களின் ஒரு பிரிவாக கணக்காய்வு அளவுகோல் கணக்காய்விற்கு உட்படுத்தப்படும் தரப்பினருடன் கலந்துரையாடலுக்கு உட்படுத்தப்படுவதற்கு செயலாற்றல் கணக்காய்வாளர் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

**15. கணக்காய்வு இடர்**

நம்பகமற்ற தகவல்கள் அல்லது மீதிகள் கூட்டப்படாமை அல்லது முழுமையற்ற கணக்காய்வுக் கண்டுபிடிப்புகள், முடிவுகள் மற்றும் பரிந்துரைகளை மேற்கொள்வதற்கான வாய்ப்புகளைத் தவிர்ப்பதற்காக கணக்காய்வு இடரை நிர்வகிப்பதற்காக கணக்காய்வாளர் செயற்திறனுடன் செயற்பட வேண்டும்.

போதிய அளவிலான சான்றுகள் இன்மை, கணக்காய்வு நடைமுறைகள் போதியளவில் இன்மை, மோசடிகள் அல்லது தவறாக வெளிப்படுத்தப்பட்டதன் காரணமாக வேண்டுமென்றே மேற்கொள்ளப்படும் புறக்கணிப்புகள் தகவல்கள் வழங்கப்படுவதன் விளைவாக கணக்காய்வாளரின் கண்டுபிடிப்புகள், முடிவுகள் மற்றும் பரிந்துரைகள் தெளிவற்றதாகவோ அல்லது முழுமையற்றதாக இருப்பதற்கான இயலுமை செயலாற்றல் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வு இடர் ஆகும்.

**16. தொடர்பாடல்**

(அ) கணக்காய்வு நடைமுறை பூராகவும் கணக்காய்வு நிறுவனத்திற்கும் உரிய தரப்பினருக்கும் இடையே கணக்காய்வின் முக்கிய தகவல்களை அறிவிப்பதற்கான முறைமையைத் திட்டமிட்டு செயற்படுத்தப்படுவதற்கு செயலாற்றல் கணக்காய்வாளர் கவனத்திற்கொள்ள வேண்டும்.

(ஆ) குறித்த தரப்பினருக்கு தகவல்களை தொடர்புபடுத்துகையில் தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் சுயாதீனத்தன்மை மற்றும் பக்கச்சார்பின்மை தொடர்பான தரம் மீறப்படாமை குறித்து உறுதிப்படுத்திக்கொள்வதற்கு செயலாற்றல் கணக்காய்வாளர் கவனத்திற்கொள்ள வேண்டும்.

**17. கணக்காய்வுப் பதவியணியினரின் இயலுமை**

(அ) கணக்காய்வுப் பதவியணியின், குழுவாக தமது கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் தேவையான தொழிற்திறன் திறமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(ஆ) கணக்காய்வுப் பதவியணியின் அறிவைப் பூர்த்தி செய்வதற்காக வெளி நிபுணர்களது உதவியைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என கணக்காய்வாளருக்கு தோன்றும் பட்சத்தில் அத்தகைய நிபணத்துவ அறிவுடனான நபரை, தேவைக்கேற்ற வகையில், உயர் கணக்காய்வு நிறவனம் ஒன்றின் மூலம் வெளிவாரியாகப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

**18. கணக்காய்வுப் பணிக் கண்காணிப்பு**

கணக்காய்வு நடைமுறையின் ஒவ்வொரு கட்டத்திலும், கணக்காய்வுப் பதவியணியின் பணி நடவடிக்கைகள் முறையாகக் கண்காணிக்கப்படுவதாக உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

**19. தொழிற்திறன் தீர்ப்பு மற்றும் சந்தேகம்**

(அ) செயலாற்றல் கணக்காய்வாளர் தொழிற்திறன் தீர்ப்பு மற்றும் சந்தேகக் கண்ணோட்டச் செயற்பாட்டைப் பிரயோகித்தல் வேண்டும். இதற்காக பல்வேறு மூலாதாரங்களின் மூலம் எழும் விடயங்களைக் கவனத்திற்கொள்ள வேண்டியதுடன் ஒன்றுடனொன்று வேறுபடும் கருத்துத் தெரிவித்தல்கள் மற்றும் தர்க்கங்கள் தொடர்பாக திறந்த மற்றும் பக்கச்சார்பற்ற கருத்தைப் பேணுவது அவசியமானதாகும்.

(ஆ) செயலாற்றல் கணக்காய்வாளர் கணக்காய்வு நடவடிக்கைகளைத் திட்டமிடுகையில் மோசடிகள் தொடர்பான இடர்குறித்து மதிப்பிட வேண்டியதுடன் கணக்காய்வு நடைமுறையை அடுத்து மோசடிகள் நேரக்கூடிய சந்தர்ப்பங்கள் தொடர்பாகவும் அவதானிப்புடன் இருத்தல் வேண்டும்.

**தொழிற்திறன் தீர்ப்பு என்பது**, கணக்காய்வு நடைமுறைக்காக தம்மால் சேகரிக்கப்பட்ட அறிவு, திறன் மற்றும் அனுபவத்தை செயற்படுத்துவதாகும். இது, விடயப் பொருள் கணக்காய்வு செய்யப்படுவதற்காக புரிந்துணர்ந்து கொள்ளும் நிலையைத் தீர்மானிப்பதற்கு கணக்காய்வாளருக்கு உபயோகப்படும்.

**தொழிற்திறன் ரீதியான சந்தேகம்** என்பது, பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் தொடர்பாக மேலும் ஆய்விற்குட்படுத்தப்படும் மற்றும் அவை விசாரணைக்குட்படுத்தக் கூடிய வகையில் மதிப்பீடு செய்யும் மனோரீதியான தன்மையாகும். கணக்காய்வுச் சான்றுகளை மதிப்பீடு செய்யும் கணக்காய்வு நடவடிக்கைகளின் போது கணக்காய்வாளர் தமது அறிவு, திறன் மற்றும் இயலுமையை நியாயபூர்வமாகவும் பாரபட்சமின்றியும் பயன்படுத்துவார்.

**20. தரக் கட்டுப்பாடு**

கணக்காய்வுச் செயற்பாட்டின் தரத்தைப் பாதுகாப்பதற்காக தேசிய கணக்காய்வு அலுவலகத்தில் தரக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்றை ஸ்தாபித்து பேணுதல் அவசியமானதாகும். செயலாற்றல் கணக்காய்வாளர், இத் தரக் கட்டுப்பாட்டு முறைமையையும் பின்பற்றியிருக்க வேண்டியதுடன் இதற்கான சகல தேவைப்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டதாகவும், சகல கணக்காய்வுச் சிக்கல்களும் தீர்க்கப்பட்டுள்ளதாகவும் குறித்த கணக்காய்வு அறிக்கை பெறுமதி சேர்க்கப்பட்ட சமஅளவிலான சாதாரண அறிக்கை எனவும் உறுதிப்படுத்த வேண்டும்.

தேசிய கணக்காய்வு அலுவலகத்தில் தரக் கட்டுப்பாட்டு முறைமை மீதான கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் விருத்தி செய்யப்பட்டு தொடர்ச்சியாக பேணப்பட வேண்டியதுடன் பதவியணிக்கும் தெரிவித்திருக்க வேண்டும். இது கணககாய்வுக் குழுவிற்கும் கண்காணிப்பாளர்களுக்கும் இடையே மாறுபட்ட கருத்துக்களைத் தீர்த்துக்கொள்வதற்கு உதவுகின்றது. இதற்கு மேலதிகமாக, கடமையில் உள்ளபோதான பயிற்சியும் மேலதிகக் கண்காணிப்பும் தரக் கட்டுப்பாட்டு முறைமையின் செயற்திறனை வலுப்படுத்துவதற்கு முக்கியமானதாகும்.

**21. பொருண்மை**

உயரிய அளவிலான பெறுமதி சேகரிக்கும் நோக்குடன் செயலாற்றல் கணக்காய்வாளர் குறித்த விடயப் பொருள் தொடர்பான நிதிசார், சமூகரீதியான மற்றும் அரசியல் ரீதியான பகுதிகளை உள்ளடக்கும் வகையில் கணக்காய்வு நடைமுறையின் சகல கட்டங்களிலும் போதுமான அளவில் பொருண்மையைக் கருத்திற்கொள்ள வேண்டும்.

பொருண்மை என்பது, செயலாற்றல் கணக்காய்வில் அது கருத்திற்கொள்ளப்படும் சந்தர்ப்பத்திற்குட்பட்ட விடயத்தின் முக்கியத்துவத்துடன் (அல்லது குறிப்பிடத்தக்கதுடன்) தொடர்புபட்டதாகும்.

பொருண்மைத்துவமானது சமூக மற்றும் அரசியல் முக்கியத்துவம், இணக்கப்பாடு, வெளிப்படைத்தன்மை, ஆளுகை மற்றும் பொறுப்புக்கூறல் மற்றும் பண மதிப்பீடு தொடர்பான விடயங்களை உள்ளடக்கியதாகும். பொருண்மைத்தன்மை காலத்துடன் மாறுபடக்கூடியதுடன் எதிர்பார்க்கப்படும் பயன்பாட்டாளர்கள் மற்றும் பொறுப்பான தரப்பினரின் முன்னோக்கைப் பொறுத்ததாகும்.

**22. அறிக்கையிடல்**

செயலாற்றல் கணக்காய்வாளர், பூர்த்தி செய்த கணக்காய்வுச் செயற்பாடுகளை போதுமான அளவில், விபரமாக அறிக்கையிடல் வேண்டும்.

(அ) கணக்காய்வு செயற்பாடு தொடர்பான தெளிவான புரிந்துணர்வை வழங்குவதற்கு

(ஆ) கணக்காய்வு செயற்பாடு குறித்த முழுமையான புரிந்துணர்வின்றி அனுபவம் வாய்ந்த கணக்காய்வாளருக்கு இக் கணக்காய்வுச் செயற்பாட்டின் தன்மை, காலம் மற்றும் நோக்கெல்லை மற்றும் செயற்படுத்தப்பட்ட கணக்காய்வுச் செயற்பாடுகளின் விளைவு தொடர்பான புரிந்துணர்வை வழங்குவதற்கும்

(இ) சகல முக்கியமான விடயங்களையும் அடிப்படையாகக் கொண்டு தொழிற்துறை ரீதியான தீர்விற்கு வந்தமை குறித்து உறுதிப்படுத்துவதற்காக கணக்காய்வுக் காண்புகள், தீர்வுகள் மற்றும் பரிந்துரைகளிற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றுகளை மதிப்பிடுவதற்கு நடாத்தப்பட்ட கணக்காய்வுச் செயற்பாடுகள் குறித்த நேரத்தில் அறிக்கையிடப்பட வேண்டும்.

## 4 ஆம் பிரிவு

**செயலாற்றல் கணக்காய்வு தொடர்பான செயற்பாடுகளுக்கு உரித்தான படிமுறைகள்**

(அ) செயலாற்றல் கணக்காய்வு திட்டமிடல்

**23. கணக்காய்வுத் தலைப்பைத் தேர்ந்தெடுத்தல்**

(அ) மூலோபயத் திட்டச் செயற்பாட்டின் மூலம் செயலாற்றல் கணக்காய்வாளர் கணக்காய்வுத் தலைப்பைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

செயலாற்றல் கணக்காய்விற்கான மூலோபாயத் திட்டமிடல் செயற்பாடு ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஆண்டுகளுக்கு இலங்கை தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் செயற்பாட்டுக் கணக்காய்வுத் திட்டத்தில் உள்ளடக்கப்படுகின்றது. நாட்டின் அரசதுறையின் மாற்றத் தன்மையையும் அரச கொள்கைகளின் முன்னுரிமை மாற்றங்களைக் கருத்திற்கொண்டும் வருடாந்தம் செயற்பாட்டு கணக்காய்வுத் திட்டங்களை மீளாய்வு செய்வது நியாயமானதாகும்.

இலங்கை தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் செயலாற்றல் கணக்காய்விற்கான செயற்பாட்டுக் கணக்காய்வுத் திட்டமானது செயற்பாட்டுத் திட்டம் மற்றும் மூலவள ஒதுக்கீட்டிற்கான ஓர் அடிப்படையாகச் செயற்படும் கணக்காய்விற்கான பகுதிகளை திட்டத்தில் பட்டியலிட்டு அவை ஒவ்வொன்றையும் ஆதாரப்படுத்தும் வகையில் சாத்தியமான பிரச்சினைகள், வினாக்கள் மற்றும் ஏனைய வாதங்கள் சுருக்கமாக விளக்கப்படலாம். மேற்குறித்த பட்டியலின் படி செயலாற்றல் கணக்காய்விற்கான தலைப்புகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அங்கீகாரத்துடன் இல்கை தேசிய கணக்காய்வு அலுவலகத்தில் செயலாற்றல் கணக்காய்வுப் பிரிவு தேர்ந்தெடுக்கப்படும்.

(ஆ) கணக்காய்வு இடர் மற்றும் பிரச்சினைகளை இனங்காண்பதற்காக ஆராய்ச்சிகளை நடாத்தி அதன் மூலம் செயலாற்றல் கணக்காய்வாளரின் எதிரில் செயற்படுத்தக் கூடிய கணக்காய்வுத் தலைப்புத் தொடர்பான பகுப்பாய்வை மேற்கொள்ள வேண்டும்.

இடர் மதிப்பீடு, பிரச்சினைகள் ஆராயப்படுதல் மற்றும் பொருண்மையைக் கருத்திற்கொண்டு கணக்காய்விற்கான தலைப்பு தேர்ந்தெடுக்கப்படும். நிறுவகத்தின் நோக்கத்தை எய்துவது தொடர்பில் தாக்கம் செலுத்தும் திறன்கொண்ட நிகழ்வின் சாத்தியத்தையும் தாக்கத்தையும் கொண்டமைந்திருக்கும். பொருண்மையானது நிதிசார் அம்சங்களுடன் மாத்திரமல்லாது சமூக மற்றும்/ அல்லது அரசியல் தாக்கங்களுடனான சட்டம் அல்லது மறுசீரமைப்பு, வெளிப்படைத்தன்மை மற்றும் நல்லாட்சி என்பவற்றுடன் தொடர்புற்றதாகும்.

(இ) கணக்காய்வுத் தலைப்பைத் தேர்ந்தெடுக்கையில், தலைப்பின் முக்கியத்துவம், கணக்காய்வுச் செயற்பாட்டை மேற்கொள்ள முடியும் எனவும் கணக்காய்வு தொடர்பாக கிடைக்கப்பெற்றுள்ள அதிகாரத்துடன் உடன்படுதல், கணக்காய்வின் மூலம் எதிர்பார்க்கப்படும் பின்தாக்கங்களை உச்சப்படுத்தல், கணக்காய்வைப் பூர்த்தி செய்வதற்கான இயலுமையையும் நிறைவான கணக்காய்வு அல்லது ஆய்வுகளின் பரிந்துரைகள் முதலியவற்றைக் கருத்திற்கொள்ளல் வேண்டும்.
செயலாற்றல் கணக்காய்வாளர், இலங்கை தேசிய கணக்காய்வு அலுவலகத்தில் உள்ள வளங்களுடன் அரச நிதி மற்றும் நிர்வாகம், கணக்காய்விற்கு உட்படுத்தப்படும் நிறுவனம் அல்லது பொது மக்களுக்கு முக்கிய நலன்களை வழங்கக் கூடிய வகையில் கணக்காய்வுத் தலைப்பின் சாத்தியமான தாக்கத்தையும் கணக்காய்வுத் தலைப்புத் தெரிவு நடைமுறையின் போது கருத்திற்கொள்வார்.

கணக்காய்விற்கு உட்படுத்தல் ஓர் கணக்காய்விற்கு ஓர் தலைப்பு ஏற்றதா என்பதின் அடிப்படையில் வரையறுக்கப்படுகின்றது. செயலாற்றல் கணக்காய்வாளர், குறித்த கணக்காய்வு அணுகுமுறைகள், படிமுறைகள் மற்றும் கணக்காய்வு அளவுகோல்கள் மற்றும் கணக்காய்வு நோக்கங்களுக்கான ஏனைய தகவல்கள் ஆக்கபூர்வமான வகையில் குறித்த நேரத்தில் மேற்கொள்ளப்படுவது குறித்து கருத்திற்கொள்ள வேண்டும்.

**24. செயலாற்றல் கணக்காய்விற்காக கணக்காய்வுச் செயல்நடைமுறையை வடிவமைத்தல்**

(அ) கணக்காய்வு நோக்கங்கள் மற்றும் வினாக்களுக்குப் பதிலளிக்கும் வகையில் போதுமான அளவிலும் உரிய சான்றுகள் சேகரிப்பதற்காகவும் ஈடுபடுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்படும் கணக்காய்வு நடைமுறைகள், செயலாற்றல் கணக்காய்வாளரால் திட்டமிடப்பட வேண்டும். இச் செயற்பாட்டிற்காக செயலாற்றல் கணக்காய்வாளர், கணக்காய்வுத் திட்டமிடல் கட்டத்தில், தேர்ந்தெடுக்கப்பட்ட கணக்காய்வுத் தலைப்புத் தொடர்பாக போதுமான அளவிலும் படிப்படியான அறிவையும் பெற்றுக்கொள்ள வேண்டும்.

(ஆ) கணக்காய்வுச் செயல்நடைமுறையை வடிவமைக்கையில், இது சிக்கனமானதாகவும், செயற்திறனான வகையிலும், பயனுள்ள வகையிலும் குறித்த கால எல்லைக்குள் மேற்கொள்ளப்படக் கூடிய உயர் தரத்திலான கணக்காய்வின் மூலம் பங்களிப்பை வழங்கக் கூடிய வகையில் திட்டமிட வேண்டும்.

குறித்த கால எல்லைக்குள் செயற்படுத்தப்பட வேண்டிய உயர் தரத்திலான கணக்காய்வுச் செயற்பாட்டிற்காக செயலாற்றல் கணக்காய்வாளர் குறித்த செயலாற்றல் கணக்காய்வு நடவடிக்கைகளை ஓர் செயற்திட்டமாக மேற்கொள்ளும் வகையில் குறித்த இலக்கை அடைவதற்காக வளங்கள் திட்டமிடல், ஒழுங்கமைத்தல், பாதுகாத்தல், நிர்வகித்தல், செயற்படுத்தல் மற்றும் முகாமைத்துவம் செய்தலை உள்ளடக்கியுள்ளமையைக் கருத்திற்கொள்ளல் வேண்டும். ஓர் செயற்திட்டமாக செயலாற்றல் கணக்காய்வு நடவடிக்கைகளை நிர்வகிப்பதற்காக செயற்திட்ட முகாமைத்துவ முறைமைகள் மற்றும் உபாய மார்க்கங்களை விருத்தி செய்தல் வேண்டும்.

கணக்காய்வைப் போதுமான அளவில் திட்டமிட்டதனை உறுதிப்படுத்துவதற்காக கணக்காய்வு நடைமுறைகளைச் செயற்படுத்துவதற்கு முன்னர், கணக்காய்விற்கு உட்படுத்தும் நிறுவனத்தின் வியாபாரச் சூழல் அல்லது கணக்காய்விற்காக பயன்படுத்தப்பட்ட கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான செயலாற்றல் கணக்காய்வாளர் போதுமான அளவு அறிவைப் பெற்றுக்கொள்ளல் அவசியமாகும். ஆகவே கணக்காய்வு நடவடிக்கைகளை ஆரம்பிக்க முன்னர் கணக்காய்வு நடவடிக்கைகள் தொடர்பான முன் கற்கை ஒன்றை மேற்கொள்வது அவசியமாகும். அதாவது அறிவைக் கட்டியெழுப்புவது, பல்வேறு கணக்காய்வுத் திட்டங்களைப் பரீட்சித்தல் மற்றும் அத்தியாவசியமான தரவுகளைப் பெற்றுக்கொள்வதற்கான இயலுமையைப் பரீட்சித்தல் போன்ற விடயங்கள் உள்ளடங்கலான ஆய்வுச் செயற்பாடுகளுக்குச் சமமானதாகும்.

கணக்காய்வுக் குழுவின் சிரேஷ்ட உத்தியோகத்தர், குறித்த கணக்காய்வுத் திட்டத்தை தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் சிரேஷ்ட முகாமைத்துவ நிலையைப் பிரதிநிதித்துவம் செய்யும சிரேஷ்ட உதவி கணக்காய்வாளர் தலைமை அதிபதி அல்லது அதனைப் பார்க்கிலும் உயர் நிலையில் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் ஒருவரின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பித்தல் வேண்டும். தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் சிரேஷ்ட மற்றும் செயற்பாட்டு முகாமைத்துவ நிலையில் உள்ள உத்தியோகத்தர்களால் ஒட்டுமொத்த கணக்காய்வு வடிவமைப்பு மற்றும் அடுத்து மேற்கொள்ள வேண்டிய மாற்றங்கள் இருப்பின் அவை தொடர்பாகவும் கணக்காய்வுக் குழுவுடன் தொடர்ந்து கலந்துரையாடலை மேற்கொள்வது அவசியமானதாகும்.

**(ஆ) செயலாற்றல் கணக்காய்வுச் செயற்பாட்டை மேற்கொள்ளல்**

**25. கணக்காய்வுச் சான்றுகளைச் சேகரித்தல்**

கணக்காய்வுக் கண்டுபிடிப்புகள், கணக்காய்வு நோக்கங்கள் மற்றும் கணக்காய்வு வினாக்களுக்குப் பதிலளிக்கும் வகையிலான முடிவுகளுக்கு வருவதற்கும் பரிந்துரைகளை வழங்குவதற்காகவும் செயலாற்றல் கணக்காய்வாளர் போதியளவான பொருத்தமான சான்றுகளைச் சேகரித்துக்கொள்ள வேண்டும்.

கணக்காய்வுச் சான்றுகளின் நியாயத் தன்மை, விடய அறிவுடைய தரப்பினருக்கு ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையில் பெற்றுக்கொள்ளப்படும் கணக்காய்வுச் சான்றுகள், போதுமான அளவில் (அளவு) பொருத்தமானதாக (தரம்) வாய்ந்த சான்றாகவும் இருத்தல் வேண்டும்.

**போதுமான தன்மை** என்பது கணக்காய்வு முடிவுகளையும் பரிந்துரைகளையும் உறுதிப்படுத்துவதற்காக பயன்படுத்தப்படும் கணக்காய்வுச் சான்றுகளின் அளவை அளவிடுவதற்கான அளவீடாகும். பொருத்தப்பாடானது கணக்காய்வுச் சான்றுகளின் தரத்துடன் தொடர்புபட்டதாகும். இதற்காக கணக்காய்வுச் சான்றுகள் உரிய முறையில் பொருத்தமானதாகவும் நம்பகரமானதாகவும் இருத்தல் வேண்டும்.

**தொடர்பாடு** என்பது, கணக்காய்வு நோக்கங்கள் மற்றும் கணக்காய்வு வினாக்களுக்கு கணக்காய்வுச் சான்றுகளின் தர்க்கரீதியான இணக்கப்பாட்டின் அளவு மற்றும் முக்கியத்துவத்துடன் தொடர்புடையதாகும். செல்லுபடித் தன்மை என்பது கணக்காய்வுச் சான்றுகளின் அர்த்தமுள்ள தன்மை மற்றும் மதிப்பீட்டிற்கு உட்படும் விடயத்தை அளவிடுவதற்காக வழங்கப்படும் நியாய அடிப்படையிலான அளவைக் குறிக்கின்றது.

**நம்பகத் தன்மை** என்பது கணக்காய்வு ஆதாரங்களிற்காக பெறப்பட்ட பல மூலாதாரங்களில் இருந்து பெறப்படும் உறுதிப்படுத்தல்களுக்கான தரவுகளின் அளவை அல்லது மீண்டும் மீண்டும் ஆய்விற்கு உட்படுத்தப்படுகையில் ஒரே முடிவை அடையக் கூடியதாக இருப்பதைக் குறிக்கின்றது.

**26. கணக்காய்வுச் சான்றுகளின் பகுப்பாய்வு**

கணக்காய்வுக் கண்டுபிடிப்புகள், தயாரிக்கப்பட்ட கணக்காய்வு நோக்கங்களுக்கும் கணக்காய்வு வினாக்களுக்கும் சமனான வகையிலும் அக் கணக்காய்வு நோக்கங்களுக்கு பதிலான வகையில் உள்ளமையை உறுதிப்படுத்துவதற்கு செயலாற்றல் கணக்காய்வாளர் சேகரித்த தகவல்களை பகுப்பாய்விற்கு உட்படுத்தல் வேண்டும். அவ்வாறில்லாவிடில், கணக்காய்வு நோக்கங்களுக்கும் கணக்காய்வு வினாக்களுக்கும் தேவையான வகையில் மீள தயாரித்துக்கொள்ள வேண்டும்.

கணக்காய்வாளரால் கணக்காய்வு வினாக்கள், பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் மற்றும் பயன்படுத்தப்பட்ட செயற்பாடுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தொடர்ச்சியான கவனிப்புடன் செயலாற்றல் கணக்காய்வின் சான்றுகள் பகுப்பாய்வு தொடர்புடையதாகும். பகுப்பாய்வுச் செயற்பாட்டின் சகல பகுதிகளும் அதன் அத்தியாவசிய பகுதியான கணக்காய்வு அறிக்கை வரையப்படும் சந்தர்ப்பம் வரை நெருக்கமான வகையில் தொடர்புபட்டதாகும்.

**(இ) அறிக்கையிடல்**

**27. செயலாற்றல் கணக்காய்வு அறிக்கையின் தரம்**

(அ) செயலாற்றல் கணக்காய்வு அறிக்கை முழுமையானதாகவும், எளிதில் புரிந்துகொள்ளக்கூடியதாகவும், எளிதாக வாசிக்கக் கூடியதாகவும் பக்கச்சார்பற்ற அறிக்கை ஒன்றாகவும் இருக்க வேண்டியதுடன் குறித்த காலப்பகுதிக்குள் சமர்ப்பிக்கப்பட்ட ஓர் அறிக்கையாகவும் இருத்தல் வேண்டும்.

(ஆ) செயலாற்றல் கணக்காய்வாளர் கணக்காய்வு நிர்ணயங்களை அவற்றின் மூலாதாரங்களுடன் கணக்காய்வு அறிக்கையில் காண்பித்தல் வேண்டும்.

(இ) கணக்காய்வு அறிக்கையை வெளியிட முன்னர், அதில் உள்ளடக்கப்பட்டுள்ள கணக்காய்வுக் காண்புகள், முடிவுகள் மற்றும் பரிந்துரைகள் தொடர்பாக கணக்காய்விற்கு உட்படுத்தப்படும் நிறுவகத்தின் கருத்துத் தெரிவிப்பிற்கு இடமளித்தல் வேண்டும்.

(ஈ) செயலாற்றல் கணக்காய்வாளர், கணக்காய்விற்கு உட்படுத்தப்படும் நிறுவகத்தின் கருத்துத் தெரிவிப்புகள் மற்றும் அதன்படி கணக்காய்வு அறிக்கையில் மாற்றங்கள் செய்யப்படுவதற்கான காரணம் அல்லது பெறப்பட்ட கருத்தை நிராகரிப்பதற்கான காரணங்கள் போன்றவற்றை அறிக்கையிட்டுக்கொள்ளல் வேண்டும்.

(உ) செயலாற்றல் கணக்காய்வு அறிக்கையின் பிரதிகள் பரவலாகப் பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் உள்ளமையால் கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள இரகசியமான தகவல்கள் மீதான பிரமாணங்கள் குறித்து கருத்திற்கொள்ளல் அவசியமாகும்.

கணக்காய்வு அறிக்கையின் முழுமைத்துவத்தை உறுதிப்படுத்தும் பொருட்டு விடயப்பொருள், நிர்ணயங்கள் மற்றும் பரிந்தரைகளை விளங்கிக்கொள்ளக் கூடிய வகையில் போதுமானளவு விளக்கங்களுடன் கணக்காய்வு நோக்கங்கள் மற்றும் கணக்காய்வு வினாக்களை தீர்ப்பதற்குத் தேவையான அனைத்துக் கருத்துக்களும் தகவல்களும் உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

எளிதாக புரிந்துகொள்ளக் கூடிய கணக்காய்வு அறிக்கைக்காக அதை ஒரு தர்க்க ரீதியான அடிப்படையில் உருவாக்க வேண்டும். கணக்காய்வு நோக்கங்கள் மற்றும் சிக்கல்கள், கணக்காய்வு நிர்ணயங்கள், முடிவுகள் மற்றும் பரிந்துரைகளுக்கு இடையே தெளிவான தொடர்பு இருத்தல் வேண்டும்.

வாசிப்பவர்களால் எளிதாகப் புரிந்துகொள்ளக் கூடிய வகையில் கணக்காய்வு அறிக்கையில் பயன்படுத்தப்படும் மொழிகள், தெளிவானதாகவும் தெளிவற்ற மொழிப் பிரயோகமின்றி இருக்க வேண்டும்.

பக்கச்சார்பற்ற செயலாற்றல் அறிக்கைக்காக அதில் உள்ளடக்கப்பட்டவைகளும் குறிப்பிடப்படுபவைகளும் பக்கச்சார்பற்றதாக இருத்தல் வேண்டும். செயலாற்றல் கணக்காய்வாளர், கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள சிக்கல்கள் குறித்து காரணங்கள் மற்றும் விளைவுகளை விளக்க வேண்டும். இது அறிக்கைப் பயன்பெறுனருக்கு பிரச்சினையின் முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்ள உதவுகின்றது.

முகாமைத்துவத்திற்கும், அரசாங்கத்திற்கும், சட்டசபைகளுக்கும் பிற ஆர்வலர்களுக்கும் பயன்பெறத்தக்க வகையிலான தகவல்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் கணக்காய்வு அறிக்கை குறித்த காலப்பகுதிக்குள் வெளியிடப்பட வேண்டும்.

**28. பரிந்துரை**

கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட குறைபாடுகள் அல்லது பிரச்சனைகளை நிவர்த்தி செய்வதன் மூலம் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கவதற்காக செயலாற்றல் கணக்காய்வாளர் ஆக்கபூர்வமான பரிந்துரைகளை முன்வைத்தல் வேண்டும்.

ஆக்கபூர்வமான பரிந்துரைகள், போதியளவு அடிப்படையுடன் கட்டியெழுப்பப்பட்ட பெறுமதிகள் சேர்க்கப்பட்டதாகவும் யதார்த்தமானதாகவும் இருக்க வேண்டியதுடன் கணக்காய்வு நோக்கங்கள், காண்புகள் மற்றும் முடிவுகளுடன் தொடர்புடையதாகவும் இருத்தல் வேண்டும். பரிந்துரைகளின் மூலம் பிரச்சனைகளுக்குக் காரணமான விடயங்களைக் குறிப்பிட்டிருக்க வேண்டியதுடன் முகாமைத்துவத்தின் பொறுப்புகளை அத்துமீறியிருத்தலாகாது. மேலும், சிறந்த செயற்திறனுக்கு அப் பரிந்துரைகள் பங்களிக்கின்றன என்பது குறித்து தெளிவாக இருத்தல் வேண்டும். தர்க்க ரீதியாகவும் பகுப்பாய்வு விடயங்கள் மற்றும் வாதங்களின் அடிப்படையில் பரிதுரைகள் இருத்தல் வேண்டும். கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் தொடர்பில் சமர்ப்பிக்கக்கூடிய பல்வேறு கருத்துரைகளைக் கருத்திற்கொள்வதற்கும் மேலும் நியாயமான பரிந்துரைகளை முன்வைப்பதற்கும் இயலுமானவகையில் குறித்த பரிந்துரைகளை இறுதியாக தொகுக்க முன்னர், தொடர்புடைய கணக்காய்வு முடிவுகள் மற்றும் அதில் எட்டப்பட்ட நிர்ணயங்கள் குறித்து தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் சிரேஷ்ட முகாமைத்துவ நிலையில் உள்ள அதிகாரிகளுடன் கலந்துரையாடுவதற்கு கணக்காய்வுக் குழு செயற்பட வேண்டும்.

**29. செயலாற்றல் கணக்காய்வு அறிக்கைகளின் வெளியீடு**

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் படி, தேசிய கணக்காய்வு அலுவலகத்தால் ஒவ்வொரு ஆண்டின் போதும் மேற்கொள்ளப்படும் செயலாற்றல் கணக்காய்வுகள் பற்றிய கணக்காய்வு அறிக்கைகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன் அவை தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் வெளியிடப்பட வேண்டும்.

**(ஈ) பின்தொடர் நடவடிக்கை**

30 (அ) செயலாற்றல் கணக்காய்வாளர், முன்னைய கணக்காய்வுக் காண்புகள் மற்றும் பரிந்துரைகள் குறித்து போதுமானளவு பின்தொடர் ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

(ஆ) கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்ட நிறுவகம், போதியளவில் பிரச்சனைகளை நிவர்த்திசெய்துள்ளமை மற்றும் நியாயமான காலத்திற்குள் சீராக்கல் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளமை தொடர்பாக செயலாற்றல் கணக்காய்வாளர், கணக்காய்வுப் பின்தொடர் நடவடிக்கைகளிற்கு உட்படுத்திக்கொள்ளல் வேண்டும்.

(இ) கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் சமர்ப்பிக்கப்பட்ட செயலாற்றல் கணக்காய்வு அறிக்கைகளை ஆராயும் பாராளுமன்ற கண்காணிப்புக் குழுவான அரசாங்க கணக்குக் குழுவிற்கு, குறித்த சகல சீராக்கல் செயற்பாடுகள், பரிந்துரைகள் மற்றும் அவற்றின் தாக்கம் தொடர்பாக அறிக்கையிடுவதற்கு தேசிய கணக்காய்வு அலுவலகம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

கணக்காய்வுப் பின்தொடர் நடவடிக்கைகள் என்பவை, செயலாற்றல் கணக்காய்வின் முடிவுகளின் அடிப்படையில் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்ட நிறுவனம் அல்லது வேறோர் தர்ப்பினரால் எடுக்கப்படும் சீராக்கும் செயற்பாடு தொடர்பாக மேற்கொள்ளப்படும் செயலாற்றல் கணக்காய்வாளரின் ஆய்வுகளாகும். இது, ஓர் சுயாதீனமான செயற்பாடானதுடன் நிறுவன செயல்முறைகள் தொடர்பில் கணக்காய்வால் ஏற்படுத்தப்படும் தாக்கத்தை வலுப்படுத்தி எதிர்கால கணக்காய்வுச் செயற்பாடுகளின் வளர்ச்சிக்காக வழங்கப்படும் அடிப்படையாக கணக்காய்வின் செயற்பாட்டின் பெறுமதியை உயர்த்துகின்றது.

இது, கணக்காய்வு அறிக்கைகளையும் கணக்காய்வுக் காண்புகளையும் தீவிரமாகக் கருத்திற்கொண்டு செயற்படுத்தப்படுவதற்கு கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்ட நிறுவனத்தையும் கணக்காய்வு அறிக்கைகளால் எதிர்பார்க்கப்படும் பயன்பாட்டாளர்களையும் ஊக்கப்படுத்துவதுடன் செயலாற்றல் சுட்டிகளைக் கடைப்பிடிப்பதற்காக வழிவகுக்கின்றது. கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்ட நிறுவனங்களின் உள்ளக ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகளிற்காக பின்தொடர் ஆய்வு நடைமுறைகள் முக்கியமானவையாகும்.

பின்தொடர் நடவடிக்கைகளின் நடைமுறைகள் குறித்த பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதுடன் மட்டுப்படுத்தப்படுவதில்லை. எனினும், கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்ட நிறுவனம் போதிய அளவில் பிரச்சனைகளை நிவர்த்தி செய்வதற்கு நியாயமான காலப்பகுதிக்குள் அவற்றைச் சீராக்குவதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளமை குறித்தும் ஆய்விற்கு உட்படுத்தப்படுகின்றன.

EOG 12 - 0046

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.